பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk

My No :- NP/09/FRM/2010 21.06.2010

மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:- PT/07/2010

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>நடைமுறைச் செலவினத்தைக் கட்டுப்படுத்தல் 2010ம் நிதியாண்டு</u>

2010ம் நிதியாண்டிற்காக நடைமுறைச் செலவினத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை **567.3Mn.** இனால் குறைப்பு செய்யப்படுவதாக நிதி ஆணைக்குழுவினால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நடைமுறைச் செலவினத்தைக் கண்டிப்பாக கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

2. இதன் பிரகாரம் இந்நிதியாண்டில் நடைமுறைச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையில் <u>ஆளுக்குரிய வேதனாதிகள் (Personal Emoluments) தவிர்ந்த ஏனைய செலவு விடயங்கள் அனைத்திலும் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் தொகையிலிருந்து 10% ஐத் தடுத்து வைப்பதற்கு (Freezing)</u> தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. இந்நிதியாண்டின் நடைமுறைச் செலவினத்திற்காக மேலதிக நிதி எதுவும் தங்களுக்கு வழங்கப்படமாட்டாது. எனவே ஒதுக்கப்பட்ட நிதியை கட்டுப்படுத்தி செலவு செய்யுமாறு கண்டிப்பாக கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

4. 2010ஆம் நிதியாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் சிறந்த நிதிக் கட்டுக்கோப்புடன் கூடியதாக செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது சகல பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். இதன் பிரகாரம் இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கின்றேன். அத்தோடு ஒதுக்கீட்டை மிஞ்சி செலவு செய்வதனால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு அவ்வவ் உத்தியோகத்தர்களே பொறுப்பாவார்கள்.

ஆ.சிவசுவாமி
பிரதம செயலாளர்

பிரதி:-
1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
3. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு – வ.மா

} தக வலுக்காக

91

பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්තියා පාරල වරෝතයනගර්ල ත්‍රිකුණාමලයග
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk

(138)

| எனது இல. / මගේ අංකය / My No. | உமது இல. / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date. 25.10.2010 |
|---|---|---|

My No: - **NP/09/FRM/2010** Date: 25.10.2010

**செயலாளர்கள்,**

**பிரதிப் பிரதம செயலாளர்கள்,**

**திணைக்களத்தலைவர்கள்,**

**வடமாகாணம்.**

**<u>நடைமுறைச் செலவினம் - 2010</u>**

**மாகாணத்திறைசேரி சுற்றுநிருப இல:- PT/07/2010 தொடர்பாக தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.**

**மேற்குறித்த சுற்றுநிருபத்தில் பந்தி 2ன் பிரகாரம் இந்நிதியாண்டில் நடைமுறைச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையில் ஆளுக்குரிய வேதனாதிகள் தவிர்ந்த ஏனைய செலவு விடயங்கள் அனைத்திலும் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் தொகையிலிருந்து 10% ஐத் தடுத்து வைப்பதற்கான ஏற்பாடு <u>இத்தால் இரத்து செய்யப்படுகின்றது.</u>**

**ஆ. சிவசுவாமி,**

**பிரதம செயலாளர்**

**பிரதி:-**

1. **உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா**
2. **பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு - வ.மா**

} **தகவலுக்காக.**



பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary 026 3266501
அலுவலகம் / කාර්යාලය / Office 026 3262285
தொலை நகரி / ෆැක්ස් / Fax 026 2226952